# Halo 2012 ஜெப குறிப்புகள்

## 2012 நற்கிரியைகளின் ஆண்டு என்பதால் நன்மைகளை செய்வோம் ஆசீர்வாதம் பெறுவோம்.

1. தமிழகத்தின்அனைத்து மாவட்டங்களில் இருந்தும் 1500 மேற்பட்ட வாலிபர்கள் இம்முகாமில் கலந்து கொள்ள மன்றாடுவோம்.
2. முகாமிற்காக வாலிபர்களை திரட்டும் பணியில் ஈடுபடும் மாவட்ட அளவிலான தலைவர்களை தேவன் ஞானத்தினால் நிரப்பவும், அவர்கள் துடிப்புடன் செயல்படவும் ஜெபிப்போம்.
3. சரியான வயதினர் மற்றும் முகாமிற்கு ஏற்ற இளைஞர்கள் இவர்களை தமிழகத்தின் ஐந்து மண்டலத்தில் இருந்து திரட்டும் பொறுப்பாளர்கள் சென்னை – ஆன்ந்த், குமரி, பிரவீண், மதுரை செல்வின், கோவை கிப்ட் செல்வின், திருச்சி சக்கரவர்த்தி ஆகியோரை தேவன் ஞானத்தினாலும், சரியான சாமர்த்தியத்தினாலும் இலக்கை தாண்டுபவர்களாகவும் பயன்படுத்த மன்றாடுவோம்.
4. அனைத்து மாவட்டங்களிலிருந்தும் சரியான விகிதத்தில் பங்கேற்பவர்கள் +1 முதல் 25 வயதிற்குள்ளான மணமாகாத இளைஞர்கள் மட்டும் அழைத்து வரப்பட மன்றாடுவோம். வயது குறைந்த சிறுவர்கள் தவிர்க்கப்பட கருத்தாய் ஜெபிப்போம்.
5. செய்தியாளர்கள் தேவனுடைய பாதத்தில் காத்திருந்து, செய்தியைப் பெற்றுக்கொண்டு, வல்லமையோடும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தோடும் செய்தியளிக்க ஜெபிப்போம்.
6. ஒவ்வொரு செய்தியின் நிறைவில்
   - இரட்சிக்கப்படாதோர் அனைவரும் கிறிஸ்துவுக்கு தங்கள் வாழ்வை அர்ப்பணிக்க
   - ஏற்கனவே இரட்சிக்கப்பட்டோரும் பரிசுத்த வாழ்வில் நிலைத்திருக்க ஆழமான தீர்மானங்கள் எடுக்க
   - அனேகர் ஞானஸ்நானத்திற்கு கீழ்ப்படிய
   - அனைவரும் ஆவியானவரின் அபிஷேக அக்கினி பெற ஜெபிப்போம்.
7. முகாமின் மூன்று நாட்களிலும் பரிசுத்த ஆவியானவரின் அசைவாடுதலும், ஆளுகையும் இருக்க கண்ணீடன் விண்ணப்பம் செய்வோம்.
8. முகாம் நாட்களில் அரசியல், சமூக மற்றும் சாதகமான கால சூழ்நிலைகள் நல்ல நிலையில் இருக்க தேவனிடம் கெஞ்சுவோம்.
9. தங்குமிடம், குளியல் மற்றும் சமையலுக்கு தேவையான தண்ணீர் வசதி, சமையல் பொறுப்பாளர் தேனி ஜான்ஸன் அவர்களுக்காகவும், வாலிபர்களுக்கு ஒத்துக்கொள்ளக்கூடிய தட்ப வெப்ப நிலை, சித்தேரி மலையில் முகாம் நடக்கும் நாட்களில் காணப்பட பாரத்தோடு பரமனிடம் விண்ணப்பிப்போம்.
10. முகாமின் தங்கும் இடம் வசதி அரங்கத்தின் மேடை அமைப்புகள் இருக்கை வசதிகள், மற்றும் தண்ணீர் வசதிகளை ஒழுங்கு செய்யும் சைமன், நடராஜ் மற்றும் மிஷனரி குழுவினரை தேவன் ஞானத்தினாலும் தொண்டு செய்யும் உற்சாக ஆவியினாலும் நிரப்பப்பட மன்றாடுவோம்.
11. முகாமின் மூன்று நாட்களிலும் முகாம் வளாகத்தில் ஏறெடுக்கப்படும் சங்கிலித் தொடர் ஜெபத்திற்காக மன்றாடுவோம்.

12. மின்சாரம் தடையின்றி கிடைக்கவும், தரமிக்க ஒளி, ஒலி அமைப்பாளர்கள் மற்றும் (சகோதரர் மனோகர் குழுவினர்) மேடை அலங்காரம், புகைப்படம், வெப்சைட் கிரியேட்டர் சகோ. கிருபா குழுவினர் மற்றும் யாவும் சிறப்பாக அமைந்திடவும் ஜெபிப்போம்.
13. முகாமிற்காக வாகங்களை ஒழுங்கு செய்யும் போது குறைந்த செலவில் நல்ல வாகங்கள் மற்றும் ஓட்டுநர்கள் கிடைக்கவும், பயண கிருபைகளுக்காகவும் தேவனிடம் ஜெபிப்போம்.
14. முகாம் வளாகத்தில் பதிவு செய்யும் குழுவிற்காக ஜெபிப்போம்.
15. முகாம் ஒருங்கிணைப்பாளர், (கிரிஸ்டோபர்பெச்சமின், ஜெ. செல்வின்) நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர், தன்னார்வப் பணியாளர்கள் மற்றும் இயக்க முக்கிய தலைவர்கள் ஞானத்தோடும் ஆவியானவின் வழி நடத்துதலோடும், ஒரு மனதோடும் செயல்பட ஜெபிப்போம்.
16. பாடல் மற்றும் இசைக்குழுவினரின் அபிஷேகத்திற்காக மன்றாடுவோம் ( காட்வின்சாமுவேல், காட்ப்ரே மற்றும் கிஷான் சிங் குழுவினருக்கும்).
17. ஆசீர்வாத புத்தகசாலையில் விநியோகிக்கப்படும் ஆவிக்குரிய புத்தகங்கள் மற்றும் விசிடி, சீடி இவைகள் ஏராளமாக விற்பனையாக ஜெபிப்போம்.
18. முகாமின் மூன்று நாட்களிலும் வாலிபர்களுக்கு எவ்வித உடல்நலக்குறைவும் ஏற்படாத வண்ணம் தேவன் பார்த்துக்கொள்ளவும்., மருத்துவக் குழுவினர் (டாக்டர். அரவிந்த்) அவர்களுக்காகவும் மன்றாடுவோம்.
19. திரளான ஜனங்களால் ஏறெடுக்கப்படும் மன்றாட்டு தூபங்களே., முகாம் நிகழ்ச்சிகளில் மகிமையான அக்னியை பரத்திலிருந்து கொண்டு வருகின்றது ஜெப முயற்சிகளை ஒருங்கிணைக்கும் சகோதரர் ஆனந்த் குழுவினரை தேவன் ஜெப அக்னியினால் தேவன் நிரப்ப மன்றாடுவோம்.
20. வாலிபர்களின் பலவித பிரச்சனைகளுக்கு ஆலோசனை வழங்கும் ஆலோசனை குழுவிற்காக ஜெபிப்போம்.
21. “மிஷனரி இரவு” நிகழ்ச்சியின் போது ஆவியானவரின்அசைவாடுதல் இருக்கும்படியாகவும், மிஷனரி சரிதை நாடகத்தின் மூலம் அநேகர் ஆத்துமபாரம் அடையவும், ஊழியத்திற்கு ஒப்புக் கொடுக்கவும் மன்றாடுவோம்.
22. நம் இயக்கத்தின் பங்காளர்களின் தியாகமான காணிக்கை மூலமே முகாமின் செலவுகள் சந்திக்கப்படுகிறது. தேவ ஜனங்கள் மனப்பூர்வமாக உற்சாகமாக, தியாகமாக கொடுக்கும் காணிக்கையை திரட்டும் பணியில் செயல்படும் சகோதரர் அருள்ராஜ் குழுவினரை தேவன் கிருபையாகவும் பாதுகாப்பாகவும் வழிநடத்த ஜெபியுங்கள்.
23. கிராம சந்திப்பின் போது வாலிபர் மிஷனரி தரிசனம் அடைய ஜெபிப்போம்.
24. அநேக புதிய ஜெபக் குழுக்கள் உருவாக ஜெபிப்போம்.
25. முகாம் முடிந்தவுடன், பின் தொடர் ஊழியங்கள் மாவட்ட அளவில் செய்யவும், கனிகள் நிலைத்திருக்கவும் ஜெபிப்போம்.
26. மாவட்ட வாரியான கூடுகையில் அநேகர் பொறுப்புகளை ஏற்றுக் கொண்டு மாவட்ட அளவிலான ஊழியங்களில் ஈடுபட மன்றாடுவோம்.
27. முகாமின் நோக்கம் நிறைவேற முகாம் முடியும் வரை முழங்காலில் நின்று ஜெபிக்கும் ஜெபவீரர்களை தேவன் எழுப்ப ஜெபிப்போம்.
28. முகாம் வெற்றியினால் கிடைக்கும் பெயர், புகழ், மகிமை அனைத்தும் நம் தேவாதிதேவனுக்கே சென்றிட ஜெபிப்போம்.

*With Prayer & Loves*

*N.B. Anand*

**No. 34/7, Maria Apartment, 2nd Floor, K.M.N. Street, Mandavelipakkam, Chennai – 600 028. Cell: 98841 77769 E-mail : mail_anand14@yahoo.co.uk**

BLESSING YOUTH MISSION
Students For Jesus
VELLORE - 632 006

# *Halo 2012*

## சங்கிலி தொடர் ஜெப விண்ணப்பம்
## ஜனவரி 3 முதல் 12 வரை

| நேரம் (ரெயில்வே) | ஜெபிப்போர் பெயர்கள் | நேரம் (ரெயில்வே) | ஜெபிப்போர் பெயர்கள் |
|---|---|---|---|
| 12.00 – 100 காலை | | 12.00 – 1.00 பிற்பகல் | |
| 1.00 – 2.00 | | 1.00 – 2.00 | |
| 2.00 – 3.00 | | 2.00 – 3.00 | |
| 3.00 – 4.00 | | 3.00 – 4.00 | |
| 4.00 – 5.00 | | 4.00 – 5.00 | |
| 5.00 – 6.00 | | 5.00 – 6.00 | |
| 6.00 – 7.00 | | 6.00 – 7.00 | |
| 7.00 – 8.00 | | 7.00 – 8.00 | |
| 8.00 – 9.00 | | 8.00 – 9.00 | |
| 9.00 – 10.00 | | 9.00 – 10.00 | |
| 10.00 – 11.00 | | 10.00 – 11.00 | |
| 11.00 – 12.00 நண்பகல் | | 11.00 – 12.00 | |

**நிரப்பிய படிவத்தை அனுப்ப வேண்டிய முகவரி**

**N.B. ANAND**
**No. 34/7, Maria Apartment,**
**2nd Floor, K.M.N. Street,**
**Mandavelipakkam,**
**Chennai – 600 028.**
**Cell: 98841 77769**
**E-mail : mail_anand14@yahoo.co.uk**